Subscription.
Inland: Rs. 50/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89
Established: 1841: A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 10 NOVEMBER 1989 No. 45
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English.
Please send them to
THE EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## CHRISTIAN HOME FESTIVAL.

This festival organised by the Women's Fellowship of the Diocese took place at Manipay on Saturday the 28th of October. The day began with a service of praise and thanksgiving in the Church led by Dr. (Mrs.) C. Ambalavanar. In spite of the sky being overcast with rain clouds the Church was packed to its full capacity. Special songs were rendered by Mrs. J. Ratnasabapathy of Jaffna College, the Women's Felowship of the Cathedral Church and also the choir of the Manipay Parish. Mrs. Rita Thangarajah of Pandaterruppu, who had represented the Women's Fellowship at the South Asian Women's Conference organised by the women's section of the Christian Conference of Asia in July this year in Madras, gave a short report. The Conference theme had been "Women's struggle for Justice and Peace". She had the audience spellbound as she narrated cases of injustice, oppression, violation and exploitation of Women in Asian countries. Many among the audience must have woken up to the realities of the sufferings of many women around them. The preacher at the service was Mrs. Chandra Victor, B. D., M. Phil., lecturer at the Christian Theological Seminary at Chunnakam. She spoke on "Women's struggle for Justice & Peace". This will be published in a later issue of the Morning Star. Another special feature was the reading together of the Tamil translation of "A Woman's Creed" taken from "Jesus and the Freed Woman" by Rachel C. Wahlberg. This has already appeared in the Morning Star.

A short break for tea given by the Pandaterruppu Church Women's Fellowship was followed by a Forum on "Women's Struggle for Justice and Peace and Love". It was presided over by the Rev. Dev Anandarajah while the speakers were the Rev. Henry Victor of the Jaffna University, Mrs. Cherry Mills of the staff of Uduvil Girls' College, Mr. Noel Vimalendran of the staff of Jaffna College and Miss. Sivaramani, a second year student of the Jaffna University. The Rev. Henry Victor said he would like to express his views on The impact of women's struggle on a male theologian as he sees it. (1) How it has brought a sense of shame, it demands of him repentance and makes anew his way of thinking while it prompts him to celebrate and give thanks (2) Through her struggle, woman is asking for equality and that it is a sad thing that she has to still struggle for this in society and the Church (3) That God as He takes an objective view is not partial and that He is with the women in their struggle (4) That in the Hebrew Bible (Old Testament) God is speaking to me and women through women's struggles -their struggle is God's event and now the one who speaks through their struggle is the Holy Spirit and (5) lastly God's words have been given in the Bible by man in man's words and human words are changeable and can be erroneous. Therefore, we cannot hold that man's words are applicable for all times. Mrs. Mills based her speech on Isaiah 32:17 and said that where there is Justice and Peace there is love, for it is love which seeks Justice and it is love which teaches peace. Isaiah gives us a vision of a world in which love, peace and justice prevails-a new transformed world, where there is harmony between God and men, man and nature and harmony between man and man. That we in our life time should endeavour to make this vision a reality. Mr. Noel Vimalendran posed the question "Why do women have to struggle for justice and peace? He went on to say that it is because love, concern for fellows and compassion are lacking in the present society. Woman is affected by war, violation of her rights, poverty and exploitation where she is looked upon as merchandise. Why has the World Council of Churches following a U. N. 's declaration of Women's decade, launched an ecumenical decade for women in solidarity with Churches. Justice is processing, the result is peace. Use love in processing Justice, but where is love to be found?in the Church and the Bible, and so one comes to Jesus' command. love thy neighbour as thyself. Therefore the call for solidarity. Miss.Sivaramani based her talk from the sociological aspect. She spoke on how women are discriminated against by some aspects of Thesa Valamai, the evil of Dowry system, unequal wages in tea and rubber plantation labour and also in onion, paddy cultivation labour. She also spoke about violations and exploitation, how women are used in cheap advertisements. She challenged the audience to better consciousness and more active participation in relieving the sufferings of our marginalised and oppressed sisters.

Then followed a short entertainment where the Nursing Staff of Green Hospital, mimicked a T. V. programme with news, advertisements, children's item, weather report, dance recital and a short play called "This also is living" acted by the students of the Vocational Training Centre in which they depicted women's struggle for Justice and equality. A special song was rendered by a couple from the Uduvil Church.

Mr. Ratnavel and his team at Arul Manai Boys' Home hosted about four hundred people for lunch.

After lunch, the Right Reverend D. J. Ambalavanar declared open the exhibition and sale of the Vocational Treining Centre. There was even a bigger crowd at this function as families and sponsors of V. T .C. students had come to see the exhibition. The students had certainly turned out varied items of good quality and standard from broom sticks and rugs to flowers of all variety and colour, bridal floral outfit, pickles, chutneys, wines sweets, cakes with beautiful icing, children's dresses and girls' dresses, lingerie items and pillow cases, shopping baskets etc, Thanks to the efficiency of their two talented and experienced teachers, Mrs. M. Subramaniam and Miss. P. Saverimuttu. There was a brisk sale of many of the items put out. Tea and eats were then served—these being provided by the Women of the Diocese.

This was truly a Home Festival as people had come as families and it was a day well enjoyed and well spent. The members of the Women's Fellowship and specially the energetic Secretary Mrs. R. Thambiappa deserve our thanks for making this a meaning ful day.

The women have been awakened and it is our wish that they will now work harder for the liberation of their fellow women in the Church and society.

## JAFFNA DIOCESE OF THE CHURCH OF SOUTH INDIA.

## PREBYTERAL ORDINATION.

The Rev. Christo T. Roberts, Worker in Charge of the Tellippalai Church will be ordained as a Presbyter of the Jaffna Diocese of the C. S. I. on Saturday the 18th of November 1989 at 8.30 a. m. in the Cathedral Church, Vaddukoddai by the Bishop of the Diocese.

You are cordially invited to be present at the service. Please remember the candidate in your prayers.

*Secretary,*
*J. D. C. S. I.*

## SPORTS.

Mr. V.T. Sivalingam who hails from a family of brilliant all - round sportsmen and who has been associated with Jaffna athletics for a little less than three decades is once again on the saddle ever ready to stride off to activity.

The Veteran sportsman made me understand that with the Jaffna Central grounds now available for sports athletics, he intends holding coaching clinics for the up and coming athletes and Seminars for the young and dedicated coaches. He intends moving into activity immediately and hopes to conduct the Annual J. A. A. A. meet next year.

It maybe recalled here that Mr. V. T. Sivalingam who has been president of the Jaffna A. A. A. for well over fifteen years has been credited with many Firsts during his tenure of office.

Mr. V. T. Sivalingam, administrative officer, Cement Corporation, K. K. S. was elected President of the Jaffna Amateur Athletic Association for the year 1989—1990 at the Annual General Meeting held at Jaffna Hindu College recently.

## WEDDING.

The marriage took place between Swendraj Brodie and Sharmini Ratnarajah at the C. S. I. Church Colombo on Saturday the 28th of October at 5. 00 p. m. The Rev. A.Jeyakumaran, Pastor of the Cathedral Church Vaddukoddai solemnised the wedding. The Rev. James Ratnanayagam, Vicar, Holy Trinity Church, Wellawatte, preached the homily. A reception followed at Hotel Sapphire, Wellawatte.

Swendraj is a son of Mr & Mrs. A. M. Brodie, formerly of the Staff of Jaffna College and now in Ontario, Canada. Sharmini is a daughter of Mr. & Mrs. D. E. C. Ratnarajah of Vaddukoddai and a grand-daughter of Bishop Kulandran.

## சிறுவர் பகுதி



### அம்புலிமானே!

அம்புலிமானே அம்புலிமானே
அழகிய சொக்கா
எங்கெங்கு போருய்?
காட்டை போறேன்
காட்டையேன்? கம்புவெட்ட
கம்பேன்? மாடுதுரத்த
மாடேன்? சாணகம் போட
சாணகமேன்? வீடுமெழுக
வீடேன்? பிள்ளைப்பெற
பிள்ளையேன்?
எண்ணெய்க் குடத்துக்கையும்
தண்ணிக் குடத்துக்கையும்
துள்ளித்துள்ளி விளையாட
பிள்ளைக்கு வைத்த மாம்பழ
மெங்கே?
காகம் கொண்டு போய்விட்டது
காகம் எங்கே? சுட்டுப்போட்டேன்
சுட்ட சாம்பல் எங்கே? வித்துப்
போட்டேன்
வித்தகாசெங்கே? அரிசி வாங்கிப்
போட்டேன்
அரிசி எங்கே? ஆக்கிப் போட்டேன்
ஆக்கின சோறெங்கே?
அண்ணன் வீட்டு நாயும்
அக்கா வீட்டுப் பூனையும்
திண்டுவிட்டு ஓடிவிட்டன

குட்டிக் கதை.

### மரியாளைச் சந்தித்த அருணோதயம்!

மரியாள் ஓர் இளம் விதவை, வறுமை அவள் இயற்கைச் சுபாவத்தையும் மாற்றிவிட்டது. அவள் மகள் ரூத் கேட்ட கிறிஸ்மஸ் உடை வாங்கப் பணமின்றி ஆத்திரம் அடைந்து, அதட்டி, அடித்துப் பின் அரவணைத்துப் படுத்தாள்.

மனநிம்மதியற்றுப் படுத்த அவள் ஓலை வீட்டு வாசலில் கேட்ட காலடி ஓசையில் மருண்டு எழுந்தாள். தாலி இல்லாத அவள், வேலி இல்லாத பசும்புல்லெனக்கருதி யாராவது வருகிருர்களோ? அடுத்த கணம் அறிந்த குரல். 'தங்கச்சி' என்று அழைக்கிறது. எதற்காக டிரைவர் அண்ணன் அழைகிருர்? ஒரு நிமிடம் சிந்தித்தாள். தான் வேலை செய்யும் வீட்டுக்கார அம்மா ஏதாவது அனுப்பியிருப்பார்களோ? அந்த எண்ணத்தில்தான் திறந்தாள் வாசல்க் கதவை.

டிரைவர் மாரிமுத்து மரியாள் பேரில் கொண்ட அன்போ கள்ளம் கபடமற்ற தூய்மையான அன்பு. அவன் உள்ளத்தில் கடுகளவுக்கும் தீய எண்ணத்திற்கு இடமில்லை. இருள் என்னும் போர்வையில் தம்மை மூடிமறைத்து எதையும் செய்யத் துணியும் கயவர் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல அவன். கால வைத்த உடனே விளக்கையேற்றும்படி சொல்கிருன். விளக்கிலோ எண்ணையில்லை! மீண்டும் வெளிப் பக்க வெளிச்சத்திற்கு வரும்படி அழைக்கிருன்.

தயங்கி நின்ற தங்கையிடம் அண்ணன் தன் அன்பளிப்பைக் கொடுக்கிருன். செவ்விற்கு ஒரு சிவப்பு நிற பணம் முடிச்சு ஒன்றைக் கொடுத்தான் பதிலுக்கு காத்திராமல் இடம் விட்டு விரைந்து செல்கிருன் என்னே அவன் பண்பு! டிரைவர் அண்ணனின் அன்பு அவளை உலுக்கியது. இருண்டுபோக இருந்த அந்த கிறிஸ்மஸ் நன்னுளில், ஒரு ஒளி ஊடுருவிப் பாய்ந்தது. தான் வேலை செய்யும் கிறிஸ்தவ மக்களிடம் காணப்படாத காருண்ணியத்தைக் கண்டாள். அவள் உள்ளத்தில் அன்பு ஒளி ஒளிர்ந்தது.

அவசரமாக அவன் அடுத்த நாள் வேறு ஊருக்குப் போகப் போகிருன். ஆனல், அவசரத்திலும் அவகாசம் உண்டாக்கியது. அவனும் அவள் போல் ஓர் உழைப்பாளி. ஆனல் முதலாளியிடம் காணப்படாத முதல் அன்பு இவனிடம்!

இரவின் இருட்டு நீங்கி, ஆதவன் தன் செங்கதிர் வையகத்தில் வீச அருணோதயம் பிறக்கிறது. அந்த வைகறை. உள்ளத்தில் உவகை ஊட்டுவது போல், அண்ணனின் அன்பு அவள் வாழ்க்கையில் அன்று ஒளி வீசியது. சிவப்பு நிறப் பண முடிச்சு, செங்கதிர் போல் அவள் கண்ணைக் கலக்கியது. இல்லாமையாகிய இருட்டை அகற்றியது. விளக்கேற்ற எண்ணெய்க்கு வழி வகுத்தது. மகள் ரூத்தின் பிஞ்சு உள்ளத்தில் உவகை ஊட்டக் காரணமானது.

தாய்க்கு வேறு என்ன வேண்டும்? அவள் கையெடுத்தாள். டிரைவர் அண்ணனின் உள்ளத்தில் உதயமான உன்னத அன்பு, தன் நலமற்ற தியாகம், அவனின் உயர்ந்த உள்ளத்தை அவளுக்குக் காட்டிப் பொழுது விடிந்தது போல் பிரகாசித்தது அன்புக்குழிவில்லை.

P. ஜெஸ்மின்.

### புனிதர் லூக்காவின் நற்செய்தி நூலில் இயேசுவும் பெண்களும்.

1. ஊழியம் செய்த பெண்கள் — லூக். 8 : 3
2. கூடவே இருந்த பெண்கள் — லூக். 8 : 3
3. சிலுவை வரை சென்ற பெண்கள் — லூக். 23 : 27
4. சிலுவைக் காட்சி கண்ட பெண்கள் — லூக். 23 : 49
5. அடக்கம் கண்ட பெண்கள் — லூக. 23 : 55
6. உயிர்த் தெழுதல் கண்ட பெண்கள்— லூக். 24 : 1, 22
7. நற்செய்தி பரப்பின பெண்கள் — லூக். 24 : 9

## அற்ககோல்

( 5ம் பக்கத் தொடர்ச்சி )

சேர்ந்து செயற்பட ஆரம்பிக்கவேண்டும், அப்போது, அவர்களைப் போன்று குறுக்கு வழியாற் செல்பவர்களும் நேர்வழியைநாட, ஒரு வாய்ப்புக் கிடைக்கும்; சங்கத்தின் செயற்பாடுகளில் இத்தகைய பாதி மனிதர்களையும் பங்கேற்கச் செய்யலாம்: அவர்களுக்கு அறிவுரை கூறும் வைபவங்களை நடாத்தலாம்: இதனல் சமுதாயத்தின் சீர்கேடுகளைக் குறைக்கவும் முடியும்.

இத்தகைய சங்கங்கள், நல்வழியை நாடிவருவோர்க்கு நல்வரவு கொடுத்து, அவர்களுக்குப் புணர் வாழ்வு கிடைக்கவும் கைகொடுக்கலாம். சிறுகைத்தொழில்கள் என்பவற்றை ஆரம்பித்து, அவர்களுக்கு தொழில் வாய்ப்பையும் கொடுத்து உதவலாம். இவ்வாறு திருந்தியவர்கள், நாளைய நாட்டின் ஆணிவேர்களோடு பக்க வேர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். பிழை விடும் மனிதன் தன் பிழையைத் தானே உணரும் போது, திருந்தி விடுகிருன். திருந்திய மனிதன், இன்ஞெரு தடவை அதே பிழையை விடமாட்டான் என்பது நிச்சயம்: அது மட்டுமல்ல தான் விட்ட பிழையை ஏனையோரும் விடக்கூடாது என்றே விரும்புவான். முயற்சியால் ஏனையோரையும் நல்வழிப் படுத்த முயல்வான்.

ஒரு மனிதன் தானே திருந்துவதற்குப் பல காரணங்கள் இருக்கும். பிள்ளைகள் திருந்த வேண்டுமென்ருல் கட்டாயம் பெற்ருேர் அக்கறை காட்ட வேண்டும். இப்படிப்பட்ட பிள்ளைகளுக்கும் பெற்ருேருக்கும் இடையே பெரும்பாலும் ஒற்றுமை நிலவுவதில்லை: என்ருலும், இத்தகைய பிள்ளைகளை நல்வழிக்குக் கொண்டு வரப் பெற்ருேர்கள் பிள்ளைகளை அணுக வேண்டும்: அவர்களுடைய சினேகிதர் போன்றே நடந்து கொள்ள வேண்டும்: அந்த வழியில் தான் அவர்களும் ஏற்று நடக்க முன் வருவர்: தம் பிள்ளைகள் எந்த வகையில் நாட்டமுடையோரோ அந்த வழியில் சென்று அவர்களை வெற்றி கொள்வது சுலபம்: பெற்ருேர் பிள்ளைகளுக்கு கதைகளினூடாகவும், திரைப்படங்களினூடாகவும் ஏனையோரின் வாழ்க்கையின் உதாரணங்களினூடாகவும் தமது பிள்ளைகள் விட்ட பிழையை தமது பிள்ளைகளுக்குப் பெற்ருேர் சுட்டிக்காட்ட வேண்டும்: அற்ககோலின் தன்மையைப் பலரின் வாய்மொழி மூலம் அவர்களின் செவிக்கு எட்டவைக்கலாம்: இல்லையேல், அவர்களுடைய நல்ல நண்பர்களின் உதவியையும் பயன்படுத்தலாம்: நண்பர்கள் தாமாகவே தம் நண்பனுக்கு உதவ முன்வரவேண்டும்: அப்படி ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு கடமையைச் செய்ய முன்வரின் நிச்சயம் அற்ககோல் யுகம் அழிந்து ஆனந்தமான உலகம் தோன்றும்: நிம்மதியான வாழ்வு கிடைக்கும்' வெறிப் பொருட்களைச் சட்டவிரோதமாக உற்பத்தி செய்வோரைச் சட்டத்தின் கைகளிற் சிக்க வைக்க வேண்டும்: பொதுசன ஸ்தாபனங்கள், மற்றும் நலன்புரிச் சங்கங்கள் இதற்கான செயற்திட்டங்களை ஆற்ற வேண்டும்: இருட்டறையை நோக்கிச் செல்லும் உலகம், நிச்சயம் ஒளி பெற, இது வழி உண்டாக்கும்.

''ஒவ்வொருவர் வாழ்விலும் ஒளித்திபம் ஏற்றி வைக்க நாமும் முயல்வோமாக''

( முற்றும். )

## அறிஞர்களின் கூற்று

❀ பெண்கள் இயல்பிலேயே இனிமை நிரம்பியவர்கள். அன்பென்னும் ஐசுவரியத்தைப் பிறவியிலே பெற்றெடுத்தவர்கள்.
தாகூர்.

❀ வனப்புடைய பெண் ஒரு மணி; நற்பண்பு வாய்ந்த பெண் ஒரு மணிக்குவை.
ஸாதி

❀ மனித வாழ்க்கையை நமக்குத் தந்தவர்களும் அதை மணம் பெறச் செய்தவர்களும் பெண்களே.
போஸி.

❀ பெண்ணிற் பெருந்தக்க யாவுள
திருவள்ளுவர்.

❀ மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா.
தேசிக விநாயகம்பிள்ளை.

❀ பெண் தாயுமாவாள், உடன் பிறந்தவளுமாவாள், கடவுளுமாவாள்.
திரு வி.க.

❀ பெண் தன்னைப் பற்றியும் தனது கற்பைப் பற்றியும் காத்துக் கொள்ள - தகுதி பெற்றுக் கொள்ள விட்டுவிடவேண்டுமேயொழிய ஆண் காவல்கூடாது.
பெரியார் ஈ.வே.ரா.

## குருஅபிஷேகம்.

தெல்லிப்பளை ஆலயத்தின் ஊழியரான அருட்சகோதரன் கிறிஸ்ரோரீ. ஞெபெட்ஸ் அவர்களை, தென் இந்தியத் திருச்சபையின் யாழ் அத்தியட்சாதின வண. ஊழியராகக் குரு அபிஷேகம் செய்யும் ஆராதனை, 18-11-89 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு, வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில் நடைபெறும்.

யாழ். ஆசனப் பேராயர் அருட்பெரும் திரு .டி. ஜே. அம்பலவாணர் அவர்களால் நடாத்தப்படும் இந்த ஆராதனையிற் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்பால் அழைக்கிருேம் — அருட் சகோதரனை உங்கள் ஜெபங்களில் நினைவுபடுத்துமாறும் கேட்டுகொள்கின்ருேம்.

செயலர் –
தெ.இ.தி.யாழ்.அ.

❀ சுயமாகத் தியானம் பண்ணும் பண்பும் தூய்மையும் சேர்ந்து வடிவெடுத்த சொருபமாக விளங்குபவள் பெண்.
மகாத்மா காந்தி

❀ பெண்களுக்குப்பலம்குறைவுதான் ஆனல் அவர்களிடம் உள்ள துணிச்சல் ஒரு ஆணுக்குள்ளதைவிட அதிகம்.
மகாத்மா.

❀ பெண்களால் உலகம் அழிந்தது உண்மைதான். ஆனல் அழிவிலிருந்து உலகைக் காப்பாற்றி வருபவர்களும் பெண்கள்தான் என்ற உண்மையை மறுக்க முடியாது.
சாக்கிரட்டீஸ்

❀ ஆண்களின் துணிவு ஆள்வதில் இருக்கிறது. பெண்களின் துணிவு பணிவதில் இருக்கிறது. ஆனல் மௌனமே பெண்ணிற்குப் புகழைத் தருகிறது.
பிளேட்டோ.

❀ பெண் வழுவழுப்பான களிமண்ணைப் போன்றவள். ஆண்தான் அதில் கலையழகை உருவாக்கவேண்டும். அவ்வாறு உருவாக்க இசைந்து கொடுப்பவள்தான் பெண்.
அரிஸ்டோட்டில்.

❀ உலகம் உய்வதற்கானவழிதேடிப் போராடிய உத்தமர்களின் வரலாற்றை ஊன்றி நோக்கும் போது ஓர் உண்மை புலப்படுகின்றது. இத்தகைய தீரர்களின் உணர்ச்சிகளுக்கு உறுதுணையாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பெண் வாழ்ந்திருக்கிருள் என்பதுதான் அது.
பெர்ஞட்ஷா.

❀ கணவனின் குரலைவிட மனைவியின் குரல் பெரிதாகக் கேட்கும் வீட்டில், மகிழ்ச்சிக் கதவு அடைபட்டுப்போகும்.
சைகு ஷா அதி.

❀ மனைவியை ஏமாற்ற வேண்டும் என்று நினைப்பவன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிருன்.
றிஸ்வாஞ மஜீத்.

❀ பெண்களால் இரகசியத்தைக்காப்பாற்ற முடியாது என்பார்கள் இது தவறு. ஒரு பெண் எவ்வளவுக்கு எவ்வளவு மதிப்பிற்குரியவளாக இருக்கின்ருளோ, அவ்வளவுக்கு அவளிடம் இரகசியம் புதைந்து கிடக்கிறது

ஆஸ்டின் ஓவல்லா.

# உதய தாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது
நீதி ஜனத்தை உயர்த்தும் : பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 149 10 - 11 - 1989 [இதழ் 45


## ★ சிந்தனை 37.

வேதப்பகுதி:ஓசி 6:1-6:
தியானம்: ஓசி. 6:6

பலிகளை அல்ல இரக்கத்தையும் தகன பலிகளைப்பார்க்கிலும் இறைவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன்.

இவ்வாக்கியத்தை மேலோட்டமாகப் பார்க்கும் போது,பலிகள் வேண்டாதவைகள் என்று அர்த்தப்படுகின்றது. இஃது அல்ல ஓசியா தரும் செய்தி. பலிகள் என்று கூறும் போது இறைமுன் கொண்டுவரப்படும் கொடைகளையே குறிப்பிடுகின்றார். இக்கொடைகள்,இறை அறிவோடு கூடிய இரக்க சிந்தையுடன், இறை முன் படைக்கப்படவேண்டும் என்பது ஓசியாவினுடைய நிலைப்பாடு.

இரக்கம் செய்பவர்கள் இரக்கம் பெறுவார்கள் (மத் 5:7), தரித்திரனுக்கு இரங்குகிறவன் பாக்கியவான் (நீதி 14:21),ஏழைகளுக்கு இரங்குபவன் இறைவனுக்குக் கடன் கொடுக்கிறான் (நீதி 19:17), ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்

ஆ. வே. இயேசுதாசன்.

புக்களுமுண்டு (தானி 9:10), உம்முடைய மிகுந்த இரக்கத்தையே நம்பியிருக்கிறோம் (தானி 9:18), என்ற வசனங்களைச் சிந்தியுங்கள்.

திருமறையில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில், கிட்டத்தட்ட நூற்றிப் பன்னிரண்டு தடவைகள் ''இரக்கம்'' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இரக்கம் என்ற சொல்லைப் பயன்படுத்தாவிட்டாலும் ஆதியாகம ஆசிரியர் இரண்டு இடங்களில் இச்சொல்லுக்குச் செயல் வடிவம் அமைத்துத் தருகின்றார். (ஆதியாகமம் 3:21;4:15) ஓசியா 6.6 ஆம் வசனம் தனிச் சிறப்பு உடையது. ''இரக்கம்'' என்ற சொல்லுடன் ''இறை அறிவு''என்ற சொல்லையும் இணைத்துப் பேசுவது ஓசியா தரும் சிந்தனையின் தனித்தன்மையாக அமைந்துவிடுகின்றது.

இறை அறிவிலிருந்து ஆரம்பமாகும் இரக்க சிந்தை எல்லாத் தடைகளையும் கடந்து செயல்படும் இயல்புடையது என்பதற்குச் செயல் வடிவமாக அமைந்தது தான் ஓசியா 3 ஆம் அதிகாரம்,

எல்லா மக்களிடமும் இரக்க சிந்தையுண்டு வீதியோரமாய் நாய் ஒன்று செத்துக் கிடக்கின்றது. எல்லோரும் நாயின் மரணத்தைக் குறித்து இரக்கப்படுகின்றார்கள்.

வழியே வந்த ஒருவன் நாயைப் பார்த்ததும், தனது அன்புக்குரிய நண்பனுக்குக் கற்பனை செய்து பார்க்கின்றான அவனை அறியாத இரக்க சிந்தை அன்பின் ஆழத்தில் இருந்து எழுந்து வந்து செயல் வடிவாகி நின்றது.

செத்த நாயை வீதியிலே விட்டுவையாமல்,எடுத்துப் புதைத்து விட்டுத் தன் வழி சென்றான் இவ்வுலகில் இரக்கமுள்ளவர்கள் அனேகர். இரக்கம் செய்பவர் சிலரே. இவர்களுக்குள் இறை அறிவு, அன்பு வடிவில் செயல்படுகின்றது ஆகையினாலேயே அர்த்தமுள்ள பணிவிடைகள் நடைபெறுகின்றன.

இறை அறிவும் இரக்க சிந்தையும் இணைந்து செயல்ப்படாத எந்தப் பணியும்,பூரணத்துவம் அடையாது நாகமானுடைய இல்லத்தில்,எவல்ப் பணி தொடர்ந்த எபிரேயப் பெண், இறை அறிவும் இரக்க சிந்தையும் உடையவளாய், தன் எசமானைத் தான் அறிந்த இறை அறிவுக்குள் வழிநடத்தினாள் நாகமான் சுகவாழ்வோடு இறை அறிவும் பெற்றான். (2 இரா 5:1-15)

இறை அறிவோடு கூடிய இரக்க சிந்தையுடன்,செயல் வடிவம் பெற்றுப் பிறருக்கு நம்மை அர்ப்பணம் செய்யும் போது தான்,அர்த்தமுள்ள பணிவிடைகள் மலரும். இன்றைய சூழ்நிலையில் ஓசியா, இறை அறிவுடைய இரக்க சிந்தையுடன் செயல்படவாரீர் என்று இறை அறிவுக்கு அழுத்தம் தந்து நம்மை எல்லாம் இறைசித்தம் செய்ய அழைக்கின்றார்.

## செய்திக் கதிர்.

### கிறிஸ்தவ குடும்ப விழா.

யாழ் ஆதினத்தின் கிறிஸ்தவ குடும்ப விழா, அக்டோபர் மாதம் 28 ஆம் திகதி மானிப்பாயில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ் விழாவின் கூட்டங்கள், யாழ். ஆதினப் பெண்கள் ஒன்றியத்தின் தலைவர் டாக்டர் திருமதி. சந்திரா அம்பலவாணர் அவர்கள் தலைமையில் நடைபெற்றன.

அன்றுகாலை மானிப்பாய்த்தேவாலயத்தில் நடைபெற்ற நன்றி செலுத்தும் வழிபாட்டில், சபைப் போதகர் வண T. தேவநேசன் அவர்கள் கலந்து கொண்டார். கிறிஸ்தவ இறையியல் கல்லூரி விரிவுரையாளர் திருமதி. சந்திரா விக்டர் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். திருமதி நீட்டா தங்கராசா தாம் பங்கு பற்றிய தெற்காசிய கிறிஸ்தவ திருச்சபை மகளிர் மாநாட்டின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

இதன் பின் நடைபெற்ற கருத்தரங்கு, வண தேவ் ஆனந்தராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் திரு நோயல் விமலேந்திரன், டாக்டர் ஹென்றி விக்டர், திருமதி ஷெறீன் மில்ஸ், ஆகியோர் பங்குபற்றினர். இதன் பின் கலைநிகழ்ச்சி, மானிப்பாய் மகளிர் தொழிற்கல்வி நிலைய மாணவிகளாலும், மருத்துவச்செவிலியர் பயிற்சி நிலைய மாணவிகளாலும் சிறப்புற நடத்தப்பட்டது.

இவ்விழாவின் தலையங்கமாக, யாத், 3:7,8 ம் வசனங்கள் சிந்தனைக்கு வழங்கப்பட்டன. மீகா 6:8 ஆம் வசனத்திலும் கருதுரைகள் வழங்கப்பட்டன. விசேட பாடல்கள் இடம் பெற்றன பெண்களின் பற்றுதி ஒன்று இம்முறை புதிதாக இம்மாநாட்டில் வழங்கப்பட்டமை. குறிப்பிடத்தக்கது. மகளிர் ஒன்றியத்தின் செயலர் திருமதி A. தம்பியப்பாவின் விடாமுயற்சியால்' சமூகமளித்த அனைவர்க்கும் விருந்துபசரணை ஒழுங்கு செய்யப்பட்டது. அனைவரும் ஐக்கியமாக விருந்துண்டு மகிழ்ந்து போயினர்.

### ஸ்ரீலங்கா. தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் வரவேற்பு. (N.C.C)

ஸ்ரீலங்கா/ தே.கி.மவின் நிறைவேற்றுக்குழு, 14-10-89 சனிக்கிழமை, சந்தித்துக் கூடிய போது, பின்வரும் தீர்மானத்தை எடுத்தது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசச் செயற்குழுவை, ஸ்ரீலங்காவுக்கு அழைப்பதென, ஸ்ரீலங்கா அரசு எடுத்த தீர்மானத்தை, ஸ்ரீலங்கா/ தே.கி.ம வரவேற்கிறது. அத்தோடு, செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசச் செயற்குழுவின் ஆக்க வேலைகளுக்கு ஒத்துழைப்புத் தருமாறும் மதவழி ஊழியர்களையும் பிரசங்கிமாரையும் அழைத்துநிற்கிறது.

### மீண்டும் மின்சாரம்.

பழுதடைந்த மின்கோபுரம் தற்காலிகமாகத் திருத்தப்பட்டதன் காரணமாகக் கடந்த வெள்ளிக்கிழமையில் 6-10-89 இருந்து வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு மீண்டும் மின்சாரம் கிடைத்துள்ளது.

ஜூலை நடுப்பகுதியில் மின்கோபுரம் உடைக்கப்பட்டதால் தடைப்பட்ட மின்சார விநியோகம், கோபுரம் தற்காலிகமாகப் பழுதுபார்க்கப்பட்ட பின் சீராக்கப்பட்டுள்ளது. மின்சாரமற்ற இருண்ட வாழ்க்கையை கடந்த மூன்றுமாத காலத்தில் பல்வேறு அவதிகளுக்குட்பட்டு மக்கள் தெரிந்து கொண்டார்கள்.

தொழிற்சாலைகள், மில்கள்,கடைகள் நிறுவனங்கள் மற்றும் அன்றாடத் தேவைகளும் மின்சாரமின்றிப் பாதிப்படைந்த நிலையிலேயே காணப்பட்டது. நெல்லிருந்தும் அரிசியாக்க முடியாத நிலையினால் அரிசியின் விலை சுமார் இருபது (20) ரூபாவுக்கு ஏறியது. ஏனைய அத்தியாவசியப் பொருட்களும் மின்சாரத்தைக் காரணமாக்கி விலையேறின.

### க.பொ.த (உ/த) பரீட்சை.

க.பொ.த. உயர் தரப் பரீட்சை டிசம்பர் மாதம் 4 ம் திகதி முதல் 28 ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக, பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு இலட்சத்து 48 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றும் இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நவம்பர் நடுப்பகுதியில் அனுப்பிவைக்கப்படுமெனவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

### தேர்தல்.

இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் நவம்பர் மாதம் 22 ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

17 10.89 செவ்வாய்க்கிழமை காலையில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி தலைமையில் அவசரமாகக் கூடிய அமைச்சரவை மேற்கண்ட முடிவை எடுத்தது. இதற்கான அதிகார பூர்வ அறிவிப்பை நேற்றிரவு இந்தியத் தலைமைத்தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டது.

### உச்சி மாநாடு.

பொதுநலவாய நாடுகளின்(காமன் வெல்த்) உச்சிமாநாடு 18.10 89 புதன்கிழமை மலேஷியாவில், மலேஷியப் பிரதமர் டாக்டர் மஹதீர் மொகமட் தலைமையில் ஆரம்பமாகியது.

டொமினிக்காவைத் தவிர நாற்பத்தொன்பது அங்கத்துவ நாடுகள் இதில் கலந்து கொள்கின்றன. பாகிஸ்தானும் இம்முறை கலந்து கொள்கிறது குறிப்பிடத்தக்கது. பங்களாதேஷ் பிரச்சனை காரணமாக பாகிஸ்தான் இதிலிருந்து விலகியிருந்தது.

மலேஷியப் பிரதமரின் தலைமையுரையைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும், பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனுசிர் பூட்டோவும் உரையாற்றுவார்கள்.

தென்னுபிரிக்கா மீதான பொருளாதாரத்தடை பற்றி இம்முறை தீர்மானம் வரக்கூடும். அதனை,பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரட் தாட்சர் எதிர்ப்பார் எனவும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

### பஞ்ச நிவாரணம்.

சிங்கப்பூரையும், மலேஷியாவையும் சேர்ந்த 3000 கிறிஸ்தவ மக்கள் ''வேர்ல்ட் விஷன்'' மேற்கொண்ட 30 மணித்தியாலப் பஞ்ச நிவாரண திட்டத்தின்படி உண்ணுவிரதம் இருந்தனர்.

வழக்கமாக, உணவிற்காகச் செலவிடப்படும் பணம் தெற்கு சூடான், மொசாம்பிக், எத்தியோப்பியா போன்ற நாடுகளில் பட்டினியால் வாடும் மக்களுக்கு உணவளிக்கப் பயன்படுத்தப்படும்.

சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் 59 மதஸ்தாபனங்களும் 23 தனி நபர்களும் உயிர்காக்கும் இத்திட்டத்தில் செயற்பட்டுவருகின்றன. இதன் மூலம் 150, 000 அமெரிக்க டொலர்கள் திரட்டமுடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### நீ சிந்தித்ததுண்டா?

நீ உன்னைச் சூழவுள்ள இயற்
கையைக் காண்கின்றாயே
அதைப்பற்றி நீ சற்றுச் சிந்தித்
ததுண்டா?
பரந்த வானம், உயர்ந்த
மலைகள்
மரங்கள், செடிகள், கொடிகள்
மனதைப் பறிக்கும் வண்ண
மலர்கள்
இவற்றைப் படைத்தவரை
நீ சற்றுச் சிந்தித்ததுண்டா?
பரந்த சமுத்திரம், நீரோடை
கள், நீர்வீழ்ச்சிகள்
பாலைவனங்கள், பள்ளத்
தாக்குகள்
உலகிற்கு ஒளி கொடுக்கும்
சூரியன், சந்திரன்
மனிதனை வாழவைக்கும்
நீர், காற்று, ஒளி
நம்மைச் சூழவுள்ள மிருகங்கள்
பறவைகள்
இவற்றைப் படைத்தவரை
நீ சற்றுச் சிந்தித்துண்டா?
உன்னுடன் இவ்வுலகில் வாழும்
பல இன, பலநிற மனிதர்கள்
நண்பர்கள், சகோதரர்கள்,
உறவினர்
நீ அன்பு செய்பவர்கள், உன்
னில் அக்கறையுடையோர்
உன்னை ஆதரித்து அரவணைக்
கும் பெற்றோர்
இவர்களைப் படைத்தவரை
நீ சற்றுச் சிந்தித்ததுண்டா?
உன்னையும் என்னையும்
படைத்து
நமக்குத் தேவையான
சகலதையும் படைத்து
பாவிகளாகவே இருந்த
போதும்
எம்மை ஆதரித்து அன்பு
செய்யும்
இறைவனைப் பற்றிச் சிந்திக்
கின்றாயா?
அவரது அளப்பரிய அன்பைப்
பற்றி நீ சற்றுச் சிந்தித்த
துண்டா?
... இல்லையா ? .........
இனியாவது நீ சிந்திப்பாயா?

# வேதாகமச் சங்கீதம் 2.

கவிதை வடிவம்: நவாலியூர் சி.என். செல்லத்துரை.

1, விண்ணவராம் கர்த்தரையே வெறுத்துச்சதி செய்வதற்கு
என்னபெரும் மடமைஇந்த மண்ணிலுள்ள நாடுகட்கு
விண்ணவனைத் தந்திரத்தால் வெல்வதற்குப் பாடுபடும்
மண்ணவரை அவர்செயலை எண்ணிற்பெரும் ஆச்சரியம்

2, இறையவனை மட்டுமல்ல அந்தவல்ல இறைவனால்நல்
முறையினிலே அங்குஅபி ஷேகம்எனும் திருமுழுக்கு
அற்புதமாய்ப் பெற்றஅந்த மெசையாவைக் கூடஇங்கு
முற்றிலுமாய் எதிர்த்துச்சதி நாசமொன்று செய்வதற்கு
பூமியிலே அரசரெல்லாம் கூடிவிட்டார் நாடுகளின்
ஆட்சியிலே உள்ளஅந்தத் தலைவர்களும் ஒன்றிணைந்து
நாடுகளின் உச்சிமகா நாடுஒன்று கூட்டிஅங்கு

3, ''வாருங்களிங் கிறைஎமக்குப் பூட்டிவைத்த விலங்கதனை
உடைத்தெறிந்து அவ்இறையால் எமக்குவந்த அடிமைஎனும்
குறைகளைந்து பெற்றிடுவோம் விடுதலையை'' என்கிறார்கள்

4, அவ்விதமாய்ச் சொன்னவரை ஆண்டவனே பார்த்துஇங்கு
நல்விதமாய்ச் சிரித்து''இது சிரழிக்கும் திட்டம்'' என்று
தன்மனதுள் கேலிசெய்து எள்ளிநகை யாடுகின்றார்

5, பின்தனது உளத்திற்கொண்ட பெருஞ்சினமாம் ஆத்திரத்தின்
கோபத்திலே நின்றஅந்த ஆண்டவனார் தனதுகோப
வேகத்திலே அம்மக்களைப் பயங்கரத்தில் மூழ்கவைத்து

6, என்றால்இன்று சிறப்பாய்அபி ஷேகம்பெற்ற மெசையாவை
இந்நாள்தொட்டு எனதுபரி சுத்தநகர் ''ஜெருசலேம்'ஐ
ஆளுதற்குத் தெரிந்துகொண்டேன் ஆதலினால் அவர்க்குமுடி
சூடுவதற்கு முடிவுசெய்தேன் சூட்டிவைத்தேன் ''என்றுரைத்தார்

7, இறைவனாலே தெரிந்துஅபி ஷேகம்பெற்று நின்றஅந்த
முறையினாலே மெசையாவும் கூறுகின்றார் ''இறைவனுடை
எண்ணமதை முடிவதனை எல்லோருக்கும் வெளியிடுவேன்''
என்றதனை கர்த்தர்தனக்குச் சொன்னவண்ணம் சொல்லுகின்றார்
''நீயேஎந்தன் குமாரன்இந்த நாள்தொடக்கம் என்மகன்நீ
நானேஉந்தன் தந்தைஇந்த நாளினிலே உனக்குமுடி
சூட்டிடுவேன் உனக்குரிய சிறப்புமிகு மேன்மைகளும்
ஈந்திடுவேன் உந்தனுக்கு நிச்சயமாய் ஈந்திடுவேன்

8, ஆதலினால் நீஎதையும் என்னிடம்கேள் அன்புஎன்னும்
காதலினால் தருவதற்கு எவ்விதத்தும் மறுத்திடாமல்
உலகிலுள்ள நாடனைத்தும் உந்தனுக்கே தருவேன்இந்தச்
நிலத்திலுள்ள குடிகளைநீ ஆட்சிசெய்வாய் அத்தோடுன்னைச்
சுற்றிலுமாய் இருக்கும்அந்த நாடுகளின் எல்லைகளும்
முற்றிலுமாய் உந்தனுக்கே உடைமையாகும் உரிமையாகும்

9, ஆளும்போது அவைகளைஉன் செங்கோலினால் ஆண்டுஅவை
வீழும்போது மண்பாண்டத்தை நொருக்குதல்போல் நொருக்கிடுவாய்'
எனஎனக்கு கர்த்தர்சொன்னார் என்றுரைத்தார் கர்த்தரிங்கு
மனமுவந்து தேர்ந்தெடுத்த அம்மெசையா. ஆம்இதனைக்

10, கேட்டுநிற்கும் அரசர்களே யூகத்தோடு வாழ்ந்திருங்கள்
ஆட்சிசெய்யும் தலைவர்களே எச்சரிக்கை யாயிருங்கள்

11, ஆழ்ந்தபய பக்தியோடு பணிசெயுங்கள் கர்த்தருக்கு
சூழ்ந்தமனப் பயத்தினோடு சுகித்திருங்கள் கர்த்தரிலே

12, இணங்கிமுத்தம் செய்திடுங்கள் இறைகுமரன் 'மெசையா'வை
வணங்கிநித்தம் அவரின்காலில் முத்தமநீங்கள் செய்யாவிடில்
மூண்டுஎழும் கர்த்தருடை சினமோஒரு கணத்தினிலே
சூழ்ந்துவரும் வந்துபற்றி யெரிக்கும்உங்கள் அனைவரையும்
ஆனால்அந்தக் கர்த்தர்தமை அண்டிநிற்போர் பாக்கியவான்கள்
வாழ்நாள்எல்லாம் பேரின்பத்தில் மூழ்கிநிற்கும் பாக்கியவான்கள்

# எலியாவின் வாழ்வு எமக்குத் தரும் செய்தி

( முற்றொடர் )

ஒரு விவசாயி நெற்பயிர் செய்ய முயன்ற போது அது அழிந்தது. அப்போது நிலக்கடலையைப் பயிரிட்டான் அது அதிக பலனைத் தந்தது. நெல் தரும் பலனிலும் அதிக பலன். இப்படியாக, தேவன் விந்தையான செயலைச் செய்யவல்லவர்.

எலியா ஆகாப்பை நோக்கி நீர் போய் போஜனம பண்ணும் மழை பெய்யும் அது அப்படியாயிற்று.

பாகாலின் தீர்க்க தரிசிகளைக் கொன்றதால் கோபம் கொண்ட யெசபேல் எலியாவை கொல்வதாக சபதமிட்டாள். இதனால் எலியா தன் உயிரைக் காக்க பெயர்செபாவில் உள்ள வனாந்தரத்திற்கு ஓடிச் சூரைச் செடியின் கீழ்ப் படுத்தான். இறைவன் உணவு கொடுத்து திடப்படுத்தி 40 நாள் இரவு பகல் நடந்து ஓரேபுக்கு அனுப்பினார்.

கர்த்தர் எலியாவுக்குச் சொன்னார் நீ போய் ஆசகேலை - சீரியா மேலும், ஜெகூவை - இஸ்ரவேல் மேலும், அரசனுக்கு, சப்பாத்தின் குமாரனான எலிசாவை உன் ஸ்தானத்தில் அபிஷேகம் பண்ணு என்றான் அப்படியே செய்தான்.

ஆகாப் தன் அரண்மனைக்குப் பக்கத்திலிருந்த திராட்சைத் தோட்டத்தைப் பெற விரும்பினான். நாபோத்திடம் கேட்ட போது அவன் மறுத்தான். கவலையோடிருந்த மன்னனுக்கு ஆறுதலளிக்க நாபோத் தேவதூஷணம் சொன்னான் எனக் குற்றம் சுமத்தி அவனைக் கொல்வித்தான். யெசபேல் மன்னனுக்குத் தோட்டங்கிடைக்கவும் செய்தாள். இதனால் எலியா அங்கே வந்து ஆகாபின் இரத்தத்தை நாய் நக்கும் எனவும், யெசபேலை மதிலின் அருகே நாய் தின்னும் என்றான். ஆகாப் மனம் வருந்தியதால் இதைத் தேவன் அவன் மகன் காலத்தில் நடைபெறும் படி செய்தான்.

ஆகாப் போல பிறர் பொருளில் அதிக ஆசை கொண்டவர்களாகவே நாம் காணப்படுகிறோம். எம்மிடம் அதிக பொருள் இருப்பினும் பிறர் பொருளையே நேசிப்பவர்களாக காணப்படுகிறோம். பிறர்

**I. D. P. செல்வன்.**
பரந்தன்.

பொருளை இச்சிக்க எதையும் செய்ய வேகம் கொள்கிறோம். இதனாலேயே பாவத்துக்குள் விழுகின்றோம். ஆகாப்புக்கு எவ்வளவோ செல்வம் இருந்த போதும் நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை வஞ்சிக்க முயன்றான். இதன் மூலம் அவன் இரத்தத்தை நாய் நக்கும் நிலையேற்பட்டது. அவனுக்குதவி செய்த மனைவியை நாய் தின்னும். நாமும் பிறர் பொருளை இச்சித்தால் எமக்கு தண்டனையுண்டென்பது உண்மையே. தன் பிழையை உணர்ந்து ஆகாப் தன்னைத் தாழ்த்தியதால் கர்த்தர் அவன் மகன் காலத்தில் இது நடைபெறும்படி மனமிரங்கினார். நாம் பாவம் செய்தாலும் மனமிரங்கும் தேவனிடம் மன்றாடும் போது மனந் திரும்பியிருப்பின் மட்டும் மன்னிப்புக் கிடைக்கும். வரவிருக்கும் தண்டனை காலந்தாழ்த்தும். நாம் எம் பாவங்களை அறிக்கையிட்டு மனந் திரும்பும் போது நிச்சயம் கர்த்தர் மன்னித்தருள்வார்.

அகதியா எனும் சமாரிய அரசன் வியாதியாயிருந்த போது வியாதி நீங்கிப் பிழைப்பேனோ என அறிய எக்ரோனில் தேவரிடம் ஆள் அனுப்பினான். எலிசா அவனிடம் இஸ்ரவேலில் தேவன் இல்லை என்று நீ எக்பேரவின் தேவனிடம் போகிறாய் அகதியா செத்தான் என்றான் அப்படியே ஆயிற்று.

அதாவது நாம் எம் தேவனிடம் எம்பிரச்சினைக்கு தீர்வுகாண முயல வேண்டியது அவசியம் அதை விட்டு வேறு வழிகள் நாடும் போது அது கஸ்டமானதாக இருக்கும். எம் தேவனை விட்டு அந்திய தெய்வங்களிடம் செல்லும் மக்களுக்கு இது ஒரு பாடம். குறி, சாத்திரம் சொல்பவர்களையும் சாமி ஆடுவோரை நாடுவோரும், எறின கட்டிலில் இறங்காமல் இருக்கும் நிலையேற்படும் என்றால் மிகையாகாது.

எலியா, எலிசாவை தன் ஸ்தானத்தில் அபிஷேகம் செய்த பின்பு சுழல் காற்று மூலம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய நாள் வந்த போது எலியா எலிசாவை விட்டு விலக முயன்றும் அவன் விடவில்லை. தான் என்ன தர வேண்டும் எனக் கேட்ட போதும் ஆவியின் இரட்டிப்பு வரம் என்றான். நான் மேலே எடுத்துக் கொள்ளப்படும் போது நீ என்னைக் காண்பாயானால் இது ஆகும் என்றான். பின் எலியா எடுத்துக் கொள்ளப்படக் கண்டான். அவன் சால்வை இவனிடம் வந்தது. ஆவியின் இரட்டிப்பு வரம் பெற்றான்.

நாமும் தேவனிடம் அவர் பணிக்காக கேட்கும் வேண்டுதல்கள் கட்டாயம் நிறைவேற்றப்படும். எனவே எலியாவின் சாட்சியான வாழ்க்கையை எமக்கு முன்மாதிரியாகக் கொண்டு வாழ்வோமாக.

(முற்றும்)

# வீரமாமுனிவர் அருளின தேம்பாவணி.

( முற்றொடர்

மரியாள் இச்செய்தியைக் கேட்டதும் அதிர்ந்தாள். அஞ்சினாள். தவித்தாள். பெருமூச் செறிந்தாள் புலம்பினாள். கலங்கினாள். மரியாள் தவிப்பு புலம்பலாக வெளிவருகிறது. ''இறைவா மூன்று வயது நடக்கும் போதே மயக்கும் மணவாழ்வு இன்றி இருப்பேன் என நேர்ந்தேன். அப்படியே ஆகுக என்று நீரும் அருள் பாலித்தீர். இப்போது மணவினை பற்றி என்னை வற்புறுத்தல் தகுமா என்று அரற்றினாள். இத்திருமணத்தின் மூலம் உனது கன்னிமைக்குக் களங்கம் வராது என்று வாக்குறுதி கொடுத்து மரியாளின் சம்மதத்தைப் பெறுகின்றான் தேவதூதன்.

திருமணப்பந்தலிலே மரியாள் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் இருக்கின்றாள்.

நிழல் ஆயம் நிங்கு(ம்) மணப்
பயனால்
கழலாயின; என்துயர் நாளும்
எலாம்
புழலாயின புண் நுழைய
பொதுளும்
தழலாய் உருகும் தமியேன்;
இனியே
மனனே! மறவாது வருந்துதியே;
கனலே உணும் கண்கள்
கலுந்துதிரே
எனவே, உளம் ஏங்கி அருது
அழுவாள்
புனலே பொருவா விழி பொங்கு
இழையாள்

மணஞ் செய்து கொண்டு வாழ்வதை எண்ணும் போது புண்ணிடை தீயால் சுடுவது போன்று வாடுகின்றேன். மனமே நீ இனி வருந்துக. சிவந்த என் கண்களே எப்பொழுதுமே கண்ணீர் சிந்துங்கள் என்று வருந்துகிறாள் மரியாள். தோழிப் பெண்கள் மரியாளுக்கு, மணப் பெண்ணுக்கு எவை அணிய வேண்டுமோ அவற்றை அணிந்து எவற்றைப் புனைய வேண்டுமோ அவற்றைப் புனைந்து சோடிக்கின்றனர். இவ்வேளையில் தோழியர் மேல் சீறி விழுகிறாள் மரியாள். அப்பாலே அகன்று போங்கள். பூமாலைகளே மணக்காதீர்கள். பொன் அணிகலன்களே ஒளி விடாதீர்கள் என்று தன் வெறுப்பைக் காட்டு

**V. குணரத்தினம்.**

கின்றாள். இறைவனின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து திருமணத்திற்கு ஒப்புக் கொண்ட போதும் மனத்திலே அவள் துறவியாகவே இருந்தாள்.

மணப்பந்தலிலே மரியாளின் பேரழகைக்கண்டு எல்லோரும் வியந்து ''இவளுக்குத் துணைவனாகும் பேறு யாருக்கோ,'' என்று ஏங்கி நிற்கின்றார்கள். இந்நிலையைக் கற்பனை செய்த கவி தனது காவியத்தில் மிக அழகாகக் கூறுகின்றார்.

"தரம் பிறர் இன்மை யின்றித்
தருமமே தூது செல்ல
வரம்பில் பேரழகினாளை மணஞ்
செய்வான் வருகிறனென்று
அரம்பையர் விசும்பினுடும் ஆடக
அரங்கு கண்டார்.

மேலும்

நம்பியைக் காண நங்கைக்கு
ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறுங்
குரிசிற்கும் அன்னதேயால்"

துணைவனாகும் நம்பி யார்? அவரே யோசெப். யோசெப் திருமணத்தை என்றுமே விரும்பியதில்லை. அதிலும் அருளும் அழகும் நிறைந்த மரியாளை மணஞ்செய்ய அவனுக்குத் துணிவுமில்லை. தகுதியுமில்லை மேலும் அவன் கையிலிருந்த கோல் தழைத்துப் பூத்ததும் அதில் மாடப்புறா வந்து அமர்ந்ததுமான சம்பவங்கள் நிகழ்ந்த போது யோசெப் மேலும் கலக்கமடைகின்றான். அப்பொழுது ஆண்டவன் தூதன் இத் திருமணத்தால் உன் துறவுக்கு ஒரு கேடும் வராது என்று கூறித் துணிவூட்டுகின்றான். மணமகனுக்கும் மணமகளுக்கும் பிரியமில்லாத இந்தத் திருமணம் ஒருவாறு நடந்து முடிகின்றது. அப்போது யோசெப்பின் வயது முப்பத்து மூன்று. மரியாளின் வயது பதினான்கு.

(வளரும்)

தாரகை ஒளி:-
விவேகத்தின் வழிவிட் டயல்வழி நடப்போன்;
செத்தவர் கூட்டம் சேர்ந்தங்கு தரிப்பான்.
— நீதிமொழிகள். 21 : 16 —

# எங்கள் கருத்து

## ★ அமைதியில் ஆண்டவர். ★

அமைதியற்ற சூழலில் வாழும் நமது மக்கள், அமைதியைக் காண வேண்டும், அடைய வேண்டுமென ஆவலுடன் காத்திருக்கின்றனர். இடைக்கிடை அமைதியின் கதிர்கள் காணப்படினும், சடுதியாக அவை மறைகின்றன. மறுபடியும் தீமைதான் நம்மைச் சூழ்கின்றது. மக்கள் மனமுடைந்திருக்கும் இவ்வேளையில் - "நீங்கள் அமர்ந்திருந்து, நானே கடவுளென்று அறிந்து கொள்ளுங்கள்" (சங். 46:10) என்று எங்களில் இரக்கமும் மனவுருக்கமும் உள்ள இறைவன் கூறுவதைக் கேளுங்கள்!

எலியா தீர்க்கதரிசி, ஓரேப் மலையில் கடவுளின் குரலைக் கேட்கக் காத்திருந்த வேளையில் பெருங்காற்று எழும்பியது — அமைதி காக்கும் படையைப் போன்று! இதில் தான் இறைவன் இருக்கிறார்., தன்னுடன் பேச வருகிறார் என்று கருதினார். - அமைதி காக்கும் படை மூலம் அமைதி வருமென நாம் எதிர்பார்த்தது போல? - ஆனால் இறைவன் பெருங்காற்றில் இல்லை. அவ்வண்ணமே, நெருப்பிலும் நில நடுக்கத்திலும் எலியா கடவுளைக் காணவில்லை. அமைதியையும் பெறவில்லை. நமக்குந்தான் இன்னும் அமைதி காணப்படவில்லை! இறுதியில் 'அமர்ந்த மெல்லிய சத்தம் கேட்டது. அதை எலியா கேட்கவே, தன் அங்கியினால் முகத்தை மூடிக் கொண்டு வெளியே வந்த கெபியின் வாசலில் நின்றான்' (1 இரா.19:13) இறைவன் எலியாவோடு பேசினார்.

அந்த மெல்லிய சத்தம்' இன்றும் தொனிக்கிறது. இதனை நமக்கு அறிவிக்க வந்த இயேசு பெருமான், இவ்வுண்மையை வாழ்ந்து காட்டினார். அவர் பிறந்த இடம் அரச மாளிகை அல்ல, எளிமையான மாட்டுக்கொட்டில். அவர் வளர்ந்த இடம் பெரும் நகர் அல்ல, சிற்றூரான நாசரேத்தில்தான். அவர் தமது திருப்பணியை நிறைவேற்ற ஆரம்பிக்குங்கால் தீயவன் அவரைச் சோதித்தான். ஆலய உப்பரிகையினின்று குதித்து, அற்புதச் செயல் நிகழ்த்தி மக்களைக் கவரும் படி தூண்டினான். நாமும் இத்தகைய சோதனைக்குள் உட்பட்டிருந்தோம்— அமைதியைப் பெறவில்லை- மெல்லிய குரலைக் கேட்கவில்லை. இயேசுவோ பெருங் காற்றுக்கும், நில நடுக்கத்திற்கும் இடம் அளிக்கவில்லை. மெல்லிய குரலில் மக்களோடு உறவாடி உண்மையை எடுத்துரைத்தார்.

இன்றும். எம்பெருமான் நம்முடன் உரையாட நமது சூழ்நிலைக்குள் வருகிறார். வியப்பூட்டும் விந்தைச் செயல்களின் வழியாய் அல்ல; நம்மைப்போல் அவரும் துன்புறும் கோலத்தோடு வருகிறார். அந்தரப்படாமல் அமர்ந்திருந்தால் மட்டும் அறிந்து கொள்ளக் கூடிய மெல்லிய குரலில் நம்மோடு பேசுகின்றார். நம் அகச்செவிகளில் முணுமுணுப்பதுபோல் உரையாடுகின்றார். நாம் அவரது குரலைக் கேட்க, அமைதி நிலை அவசியம்.

இன்று நம்மைச் சூழ அழுகைக் குரல்கள், கூச்சல்கள், ஏக்கங்கள் ஆகியன ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. இவற்றை இறைவன் கேட்காமலில்லை. கேட்கிறார். இவற்றின் ஊடே இறைவனின் குரலைக் கேட்க நாம் அமர்ந்திருக்க வேண்டும். காலை மாலை வேளைகளில் கருத்துடன் திருமறையைப் படிக்கின்ற வேளையில், மெல்லிய குரலில் அவர் பேசுவதை நாம் கேட்க முடியும். நாம் செய்ய வேண்டியதைச் சொல்லுவார்.

எவ்வித வெளிப்பகட்டும் அற்ற சாதாரண மக்களின் உரையாடல் மூலம் இறைவன் நம்முடன் பேசுகிறார். பெற்றோரை இழந்து தனித்து விடப்பட்ட சிறு குழந்தைகளின் மழலைச் சொற்கள் மூலமும் அவர் நம்மோடு தொடர்பு கொள்கின்றார். தனிமையில், அமைதியில், அவரது குரல் கேட்க நாம் ஆயத்தமா? நாட்டில் அமைதி நிலவ நாம் செய்ய வேண்டிய பணிகள் பற்றி அவர் கூறுவதைக் கேட்டு, செயல்பட நாம் ஆயத்தமா? அல்லது அமைதியாயிருக்க நாம் அஞ்சுகிறோமா? இறைவன் மெல்லிய சத்தத்தில்தான் இன்று நம்மைச் சந்திக்கின்றார்.

# போதகர் கடிதம் - 2.

அன்புத் தம்பி,

சமீபத்தில் ஷியட்றிக் பொன்ஹேபர் என்ற இறையியல் அறிஞர் எழுதிய ஒரு நூலைப் படித்தேன். அவர் குருமாருக்குக் கூறும்கருத்துக்கள் சிலவற்றை இங்கு தொகுத்துத் தருகிறேன். சிந்தித்துப் பார்!-போதகர்மார் மற்றவர்களோடிருக்கும் வேளையில்,எப்போதும் தங்கள் பங்காக ஏதாவது அளிக்க வேண்டுமென எண்ணி, சிந்தியாமல் அதிகம் பேசுகிறார்கள். பேசுவதை விடக்கேட்பது தான் அவர்கள் செய்யும் பெருந்தொண்டு என்பதை அவர்கள் மறக்கின்றனர்.

மற்றவர்கள் பேசுவதைக் கவனிக்கும் காதுகள் எங்கிருக்கிறதென்று பலர் தேடிப்பார்க்கின்றனர்! கிறிஸ்தவ குருமார் பலரிடம் அவர்கள் இவற்றைக் காணமுடிவதில்லை. ஏனெனில் இக்குருமார் கவனிக்க வேண்டிய இடத்தில் தேவையற்றதைப் பேசிக் கொண்டிருக்கிறார்களே!

தன் சபையர் சொல்வதை எந்த ஊழியனால் கவனிக்க முடியாமற் போகிறதோ, அவன், விரைவில் கடவுள் சொல்வதையும் கவனிக்க முடியாத நிலையையடைவான். அத்தகைய ஊழியன்,இறைவனின் சந்நிதியிலுங்கூட, அலப்புவதைத் தவிர வேறொன்றுஞ் செய்யமாட்டான்.

இதுவே,ஆன்மீக வாழ்க்கையின் மரணத்தின் துவக்கம். இறுதியில், ஆவிக்குரிய பிதற்றலையும், பக்திப் பாவனையான சொற்களால் அணிவிக்கப்பட்ட குருத்துவம் சார்ந்த மதிப்புக் குறைவையும் தவிர வேறொன்றும் மீந்திருப்பதில்லை.

நெடுநேரம் பொறுமையோடு செவி சாய்த்துக் கொண்டிருக்க முடியாத ஊழியன், தன் காரியத்தைத் தவற விட்டுப் பேசுவதோடு, அவன் இத்தவறை உணராதுமிருக்கின்றான். இதனால் அவன் மற்றவர்களோடு சரியான முறையிற் பேச முடிவதில்லை.

மௌனமாயிருந்து, மற்றவர்கள் தம் மனதைத் திறந்து பேசுவதைக் கேட்பதில் நேரம் செலவழிக்கவியலாமல்,தன் நேரம் விலையுயர்ந்ததென எண்ணும் ஊழியனுக்கு,கடவுளுக்கும் தன் சகோதரனுக்கும் செலவிட நேரம் இராது, தனக்கும் தன் மடமைகளுக்குமே நேரம் இருக்கும்.

சகோதர குருத்துவக் கவனிப்புத் தன்மையின் படி,செவிசாய்ப்பது பிரசங்கித்தலினின்று வேறுபடுத்தி அறியப்படுகிறது. எப்படியெனில், வசனத்தைக் கூறும் பொறுப்போடு, பிறர் பேசுவதைக் கவனிக்கும் கடமையும் சேர்ந்துள்ளதென அறியச் செய்கிறது. பேசுவதைக் குறைத்து செவிசாய்க்கக் கற்றுக்கொள். ஒரு பக்தன்,தன் மகன் முதன்முதலாக, ஒரு சபையில் திருப்பணியாற்றப் போன பொழுது,பின்வருமாறு எழுதினார். மகனே, உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்.நீ புதிதாக ஊழியஞ் செய்யப் போகும் இடத்தை அக்கரைக்குத் தாண்ட உதவும் ஒரு படிக்கல்லாகக் கருதாதே.நீசொல்ல வேண்டியது: கடவுள் எவ்வளவு காலம் நான் இங்கு திருப்பணியாற்ற வேண்டுமென விரும்புகிறாரோ, அவ்வளவு காலமும் இங்கேயே இருப்பேன்.அவருக்கு இதுவே சித்தமாயிருந்தால் நான் மரிக்கும் வரைகூட, தொடர்ந்து திருப்பணியாற்றுவேன் என்பதே. உன் சபையிலுள்ள ஒவ்வொரு ஆளையும் விசுவாசத்தில் திடப்படுத்தவும் ஆண்டவர் இயேசுபிரானின் வருகையில் ஒவ்வொருவருக்கு நீ கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதை அறிக.

ஒவ்வொரு நாளும் உன் சபையிலுள்ள இறைமக்கள் அனைவரையும், மிகத் தாழ்ந்ததும், பலவீனமுள்ளதுமான உனது கைகளினின்று, எல்லாவற்றிலும் மிகச் சிறந்ததும், வல்லமை நிறைந்ததுமான இறைவன் கரங்களில் ஒப்புவி. அப்பொழுது உன் ஊழியத்தைக் கவலையின்றி, மிக்க மகிழ்ச்சியோடும் தன் நம்பிக்கையோடும் செய்ய முடியும்.

உன்னால் பறக்கமுடியவில்லை என்றால் பாடு. கூண்டில் அடைபட்டுக் கொண்டே பாடும் பாட்டுக் கூட, கைதியாய் இருப்போர் பலரின் உள்ளத்தை மகிழ்வித்துள்ளதென அறிக.

அன்புள்ள,
அண்ணா.

# அற்ககோல்

( முற்றொடர் )

இவ்விதம் ஈரலால் தன் தொழிலைச் சீராகச் செய்ய முடியாமற் போகிறது: பித்தம், குருதியில் விடப்பட வேண்டி இருக்கிறது: சுவாசம், சமிபாடு, இதயத்துடிப்பு போன்ற செயற்பாடுகளுக்கும் கல அகத் தொழிற்பாடுகளுக்கும் வேண்டிய சக்தி கிடைக்காமல் போகிறது. இதனால் கலங்கள் இறந்து கொண்டு வர, மனிதன் இறக்க நேரிடுகிறது. அறியாமையாலும் ஆடம்பரத்தின் உச்சகட்டத்தினாலும் அநியாய உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. அற்ககோலுக்கு அடிமையானவர்களுக்கு விடுதலை பெற வழியில்லையா? இவர்கள் மதுவையும் போதைப் பொருட்களையும் உட்கொள்ளும் போது மாத்திரம் உற்சாகம் பெறுவர்: மற்றைய நேரங்களில் நடைப்பிணமாகவே இருப்பர்: இவர்களின் உடல் வலுவற்றுப் போகிறது: எதைச் செய்யவும் சக்தியற்றவர்களாய் - கதியற்றவர்களாய் பார்ப்பதற்குப் பரிதாபமான தோற்றமுடையவர்களாய்க் காணப்படுவர். இதற்குக் காரணம் நரம்புகள் அசாதாரணமாகத் தூண்டப்பட்டதால் அவைகள் செயலிழந்து விடுகின்றமையே ஆகும்.

தக்க சமயத்திலேனும் தம் வாழ்வை நல்வழிப்படுத்த வேண்டும். அற்ககோலின் பிடியிலிருந்து விடுபட விரும்பின், முதலில் ஒரேயடியாகக் குடிப்பழக்கத்தை கைவிட முடியாது: ஏனென்றால், அதனால் முழுமையாகவே ஆட்கொள்ளப்பட்டவர்களால், முழுமையாகவே அதை நிறுத்தி விடின், எதையும் செய்ய முடியாது: இதனால், கொஞ்சம் கொஞ்சமாக அதை நிறுத்திக் கொண்டு, அதற்குப்பதிலாக மாற்றுப் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்: நல்ல ஒரு வைத்தியரை நாடி, நலிந்து போன தம் உடல் நிலையைப்பேண வைத்தியம் மேற்கொள்ள வேண்டும்: வெறுமையான நேரத்தைக் குறைப்பதற்காகப்பல நன்மை பயக்கும் பொழுது போக்குகளில் ஈடுபட வேண்டும்; சமுகப் பணிகளில் முக்கிய பங்குவகிக்கலாம்: ஆலயத்துக்குச் சென்று ஆலயத் தொண்டுகள் செய்யலாம்: சிறுபிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து சந்தோஷமாக நேரத்தைக் கழிக்கலாம்: இவற்றிலும் மேலாக, தன் வாழ்வையே ஒரு கதையாக அமைத்துத் தன்னைக் கதாநயகனாக்கி நாவல் எழுத ஆரம்பிக்கலாம்: இதனால் அந்த நாவலைப் போன்ற வாழ்க்கை வாழ்பவர்களும் திருந்தச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது:

இத்தகைய குறுக்கு வழியாற் சென்று, நேர் வழியை நாடிவந்தோர், தாம் ஒரு சங்கமாகச்

( மிகுதி 2ம் பக்கம் )

# Where Did We Go Wrong?

1) The Church bells are ringing & cockbirds are crowing
Its dawning, its morning in Jaffna Town;
The "YALDEVI" is rolling in, the people are awakening
How simple and secure life was in my dear hometown.
Every house down our road was owned by a relation,
Every person we met was an Uncle or an Aunt;
1st Cousins, 2nd Cousins, Nephews or Nieces,
The whole place for generations belonged to our clan.
How jealously we guarded our Pride and Possessions,
How many quarrels we had over an inch of land!
But how lovingly we gathered at weddings & funerals
What a strong sense of "belonging" we had to our land.

2) Within a decade this happy world has vanished,
In fear and trembling on the road I now stand;
The fomiliar landmarks destroyed and finished
I meet only soldiers with guns in hand.
Oh God! Where have these dear ones gone?
Their homes look forsaken, forgotten and forlorn;
My people who lived and loved in this land
Have gone away without a thought left behind
They are scattered around the face of the Earth,
All the way from Alaska, right down to Perth!
Are they happy in these places where they roam?
Or are they aching to get back home?

3) We are an industrious & intelligent nation,
We worked so hard for all that we had;
Our Children strived so much for their Education,
Then what was it that could have gone bad?
There is another nation who was put through trial
Fought many battles to keep their land — Israel,
But were defeated, destroyed and scattered
Taken to foreign lands as slaves in fetters,
Because their Lord God they had forsaken,
And to worship, other idols they had taken.
Can it be that we Thamils too our God have forgotten?
And so have been punished and from our land driven?
Idols like Possessions and Position have we loved more
And worshipped our God only for outward show?

4) We brought this upon ourselves, we had it coming
We took everything we could, but never thought of giving
The best of ourselves to our God and Country
But went out to work for richer nations for money.
The deep things of life we did not value
And with God's Laws we cannot argue
We can't blame others for our predicament;
They are only the Lord God's instruments
To teach us a lesson we just had to lear
In fear and repentance to our Maker to turn.
He has promised that if we repent, He'll forgive
And Come back to guide us and in our midst, live.

— *Christian*

## DO YOU LOVE ME?

Text: *St. John's Gospel, Ch. 21, v. 15-17.*

When they had finished breakfast, Jesus said to Simon Peter: 'Simon son of John, do you love me more than these?' He said to Him: 'Yes Lord, you know that I love you.' He said to him: 'Feed my lambs.' A second time Jesus said to him: 'Simon son of John, do you love Me?' He said to Him: 'Lord you know that I love you.' He said to him: 'Tend my sheep'. He said to him the third time: ' Simon son of John, do you love Me?' Peter was grieved because He said to him the third time 'Do you love Me', and he said to Him. 'Lord you know everything, you KNOW that I love you'. Jesus said to him: 'Feed my Sheep.'

Since God so loved the world that He gave His only begotten Son-the echo from our side can only be to love Him also.

This man, Simon son of John, was for three years with Jesus and after being so long with Him, he denied his Master three times. Meeting Him the third time after His resurrection, Jesus asked Simon three times the question: 'Do you love Me?'

I do not want to speculate on the number 3. but one thing I would like to think on: The God of Redemption, the God of Reconciliation, is the same God as the God of Creation.

In Creation God gave to the existing chaos shape and order. By this order He keeps, even today. the cosmos in working order-the cosmos right down to the smallest flower-because HE IS the God of Order.

The harmony between Him and the crown of His creation -we human beings-has been disturbed, or muddled-up and made chaotic through sin; as it happened during the night when Jesus was on trial.

God registered what happened during that night; but not only in that night, for He is the God who keeps account of all that happens between Him and us Human beings-not only us but down to the most oppressed negro. (Please read Psalm 139). He is neither the 'Great Man' who overlooks details in life, nor the 'Old Man' who is unable to attend to them.

Jesus calls the Apostle Peter in this passage by his family name-'Simon, son of John'. In the situation when he denied his Lord, he was not an apostle (a messenger of God). but the contrary. He was just a man of flesh and blood, born from a man of flesh and blood. as good and as bad as we all are without the redeeming grace of Jesus Christ. The sin Peter committed is not an extraordinary sin. Yet the circumstances are extraordinary.

In all this he was far removed from that Old Testament saint, Abraham, of whom we have heard in the Old Testament lesson: Abraham who went step by step up the Mount Moriah. carrying all the equipment for a sacrifice, with his son by his side, who asked his father time to time-'Abba, where is the lamb for this sacrifice? Although Abraham could not understand God's order, (God after all had given him his son), he could not deny the command of God. Instead he trusted in God who provided at the last moment, the sacrificial animal.

From this Old Testament record, we can faintly imagine how serious a matter sin, and the atonement of sin, are in the eyes of God. What God finally did not ask of Abraham, He demanded of Himself-the sacrifice of His only begotten Son.

It would be wrong to say Simon was a coward. He meant what he said-'I will never deny You, I will give my life for You, and if ALL deny You, I will not do so.' He even equipped himself with a sword-not for the sake of decoration, but to use the sword in case of danger. And the hour of danger came; and he used the sword to cut off the ear of the servant of the High Priest. If God's healing hand had not been present, Simon would have suffered death on the spot. Then Jesus said to him: 'Put your sword away-who takes the sword, falls by the sword.'

Peter stood as it were, at the front portal of his Christian conviction, and while he stood there like a hero, the temptation came through the back door-in the form of a woman who asked him the intriguing question:— 'Were you not also with this man who is now under trial?' Peter must have asked himself. 'Do I owe a correct answer to this woman, who moves amongst the soldiers at midnight? A correct answer would do my Master no good, and even I may be involved: So his answer was both human and diplomatic. But it certainly was not in accordance with his Master's mind and teachings.

To take the sword is one acute danger in our time. But I believe the diplomatic use of our human intellect weighs just as heavily as a dangerous legacy on our relationship with God and our neighbour. Let us heed to the Apostolic demand: in all matters of our concern, 'to speak the Truth encompassed in Love'.

( to be continued )


## Vacancies

for Registered Nurses and Midwives.

Applications are invited from Registered Nurses and midwives.

Salary negotiable.

**APPLY BEFORE 30. 11. 1989 To:**

*The Medical Superintendent,*
*Green Memorial Hospital,*
*Manipay.*


In Memoriam.

**IN EVER LOVING**
Memory of

**Dorathy Thevaratnam Singanayagam.**

Born:- 18. 02. 1912.
Died:- 10. 11. 1988.

*Years may Pass and fade away. But thoughts of you will always stay.*

*Inserted by her Children and loved ones.*

Joylyn,
Manipay.

## OBITUARY.

The death occurred of Mr. Nannithamby Daniel Roberts of Church Road Chankanai on Sunday the 22nd of October 1989. He was 85 years of age.

The funeral service took place on Monday the 23rd at 10. 00 a. m at his home. The service was led by the Rev. S. P. Jeyasingham. assisted by the Rev. G. D. Anadarajah. Mr. S. J. Manickam worker - in - charge of Christ Church Chankanai paid the tritute. The Rev. Sevak Sam Alfred preached the sermon.

His youngest son the Rev. Christo T. Roberts performed the committal rites at the Chankanai cemetery.

The deceased leaves bthind besides his wife two sons, Anthony A. Roberts of Oman and the Rev. Christo T. Roberts minister of Tellippalai J. D. C. S. I. Church and their spouses to bemoan his death.

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/ News 89
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press, 182, 1st. Cross Street Jaffna on Friday 10 .November 1989 and published by The Rev. THEVANESAN, 182, First Cross Street, Jaffna